1971 டிசம்பர் 11]

மாவட்ட மகளிர் நல அலுவலர்கள்

* 263 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட மகளிர் நல அதிகாரிகளின் கடமைகளும், பொறுப்புகளும் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவைமுன் ஒரு விபர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

தெற்குப் பரும்பூர் அரிசனங்களுக்கு வீட்டு மனை

* 264 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த தெற்குப் பரும்பூர் அரிசன மக்கள் வீட்டு மனை திலப்பட்டாக் கோரி ஏழு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கொடுக்க வில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எப்போது பட்டா கொடுக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) தெற்கு பரும்பூர் அரிசன மக்களுக்கு வீட்டு மனை வாங்குவதற்காக அந்த ஊரிலுள்ள, ச. எண். 535/10 நிலத்தில் 2.80 ஏக்கர் ஆர்ஜிதம் செய்வதற்கு. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் 4(1) பிரிவு அறிக்கை 9—12—1970 தேதியிட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களை 5-ஏ விசாரணையில் விசாரித்து மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவு அறிக்கையை மாவட்ட ஆட்சியாளர் வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பியுள்ளார். வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை அரசுக்கு கிடைக்கப்பெற்றபின், 6-ம் பிரிவு அறிக்கை வெளியிடப்படும். பட்டா வழங்குவதற்கான அடுத்த நடவடிக்கைகள் ஆட்சியாளர் பிறகு எடுப்பார்.

0—30 a.m.

Exemption from sales tax on toddy

* 265 *Q.*—THIRU R. R. MUNUSAMI, DR. H. V HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether toddy sales have been exempted from the payment of sales tax; and

(*b*) if so, the reasons thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) Yes.

(*b*) Since this is the first year of suspension of Prohibition, the practical aspects in respect of sales of toddy are being studied. A decision on whether sales of toddy should continue to be exempt from sales tax will be taken in due course after watching the position.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில் மதுவிலக்கை நாங்கள் ரத்து செய்தது, மதுவிலக்குக்கு நாங்கள் எதிரானவர்களானதால் அல்ல; நிர்பந்தத்தினால் தான் ரத்து செய்திருக்

(170-171-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)

கிறோம் என்று பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதற்கு உதவி செய்கின்ற வகையில் இருக்கக்கூடிய விற்பனை வரி ஏன் கள்ளுக்கு விதிக்கப்படவில்லை? அது மதுவிலக்கு ரத்தைப்பற்றிய அரசின் கொள்கைக்கு முரணு இருக்கிறதல்லவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள்ளுக்கு ஏன் விற்பனை வரி விலக்கு என்பது கேள்வி. உற்பத்தியாகின்ற எல்லாப் பொருட்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதனுல் விற்பனை வரி விதிக்கலாம். ஆனுல் கள் மரத்திலிருந்து எவ்வளவு இறக்கப்படுகின்றது என்பதைப் பார்த்து விற்பனை வரி விதிப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசீலித்துப் பார்த்துத்தான் விற்பனை வரி விதிக்க வேண்டும்.

Select Committee of Parliament on sales tax

*266 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to give evidence before the Select Committee of Parliament on Sales Tax meeting in this State in October, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். ஆனுல் 1971 அக்டோபர் மாதத்தில் நடக்கவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பிரேரணைகள் இரகசியமானவைகளாக நாடாளுமன்றத் தேர்வுக் குழு கருதுவதால் விவரங்கள் வெளியிடுவதற்கில்லை.

பல்லடம், அவிஞசி வட்டங்கள்

*267 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம், அவிஞசி வட்டங்களை நிரந்தர பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நிவாரண வேலைகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

Deputy Tahsildars in Kanyakumari district.

*268 *Q*.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether the list of Regular Deputy Tahsildars in Kanyakumari Revenue Unit for 1968 and 1969 have been drawn up and published; and

(*b*) if not, whether the Government will take early steps for publishing and implementing the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) ஆம்.